# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**(Re-accredited with 'A' Grade by NAAC)**

**திருச்சிராப்பள்ளி–620024**

தொலைபேசி :0431- 2407016 / 2407060

*தொலை நகலி* : **0431-2407444**

முனைவர் இரா.திருமுருகன், பிஎச்.டி.<br>
தேர்வு நெறியாளர்(பொ)

*மின்னஞ்சல்* : **coe@bdu.ac.in**

*இனையதளம்* : **www.bdu.ac.in**


---

ந.க. எண்.: பட்டப்படிப்பு தேர்வுகள்: ஏப்ரல் 2017 நாள் : 30.01.2017

பெறுநர்

முதல்வர்<br>
இணைவு பெற்ற தன்னாட்சி அல்லாத அனைத்துக் கல்லூரிகள்

ஐயா/அம்மையீர்,

**பொருள்: ஏப்ரல் 2017** -ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலைத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் – தெரிவித்தல் - தொடர்பாக.

--------

நடைபெறவிருக்கும் **ஏப்ரல் 2017** பல்கலைக்கழக இளநிலைத் தேர்விற்குப் பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்களைப் பெறுவதற்குரிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை கீழக்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

<u>பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்களைப் பெறுவதற்குரிய கடைசி நாள்</u>:

| | | |
|---|---|---|
| **தண்டத் தொகையின்றி** | : | **01.03.2017 புதன்கிழமை** |
| **தண்டத் தொகையுடன்** | : | **08.03.2017 புதன்கிழமை** |
| **இளநிலைப் பருவத்தேர்விற்கான எழுத்துத்தேர்வுகள் துவங்கும் நாள்** | : | **17.04.2017 திங்கட்கிழமை** |

மேற்கண்ட தகவலை மாணவர்களுக்கும், மற்றும் ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கும் வகையில் கல்லூரி அறிவிப்புப் பலகையில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் அனைத்தும் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் **<u>15.03.2017 புதன்கிழமை</u>**. மேற்காணும் தேதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 90 நாட்கள் கல்லூரி இயங்கியதற்குரிய சான்றிதழைத் தேர்வு துவங்குவதற்குப் பத்து நாட்கள் முன்னதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இளநிலைப் பாடப்பிரிவுகளுக்கான தேர்வு விண்ணப்பங்களைத் தனித்தனியாக இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. தேர்வு விண்ணப்பத்துடன் அனுப்பும் பட்டியலினை குறுந்தகட்டுடன் (List with CD) இணைத்து அனுப்பவும்.

மீளப்பயிலுதல் (Re-do) மறு சேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச்சேர்க்கை (Transfer admission) பெற்ற மாணவ/மாணவிகளின் தேர்வு விண்ணப்பத்துடன் மேற்கண்ட சேர்க்கைகளுக்காகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகலை இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் தேர்வு விண்ணப்பத்தில் மாற்றுச்சேர்கை, மறுசேர்க்கை, மற்றும் மீளப்பயிலும் மாணவ/மாணவியர் என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடவும். அவ்வாறு குறிப்பிட்டு அனுப்பப்படாத தேர்வு விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

தேர்வு நெறியாளர் (பொ)

குறிப்பு: பல்கலைக்கழகத் தேர்வுகள் தொடர்பான தகவல்களை பல்கலைக்கழக தகவல் தளத்தில் (Website) பார்த்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (www.bdu.ac.in)